தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies |
ISSN(o): 3049-0723
Vol. 2 Issue: 01 August 2025

மேலாண்மை பொன்னுச்சாமியின் நாவல்களில் சமுதாய உணர்வும் மொழிநடை அமைப்பும்

Visionary Thoughts in Tamil Literature

ச.தேவநேசன்,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24.
S.Devanesan,
PhD Research scholar, Center for Bharatrhidasan studies, Bharathidasan University,
Tiruchirappalli-24 Email Id: govindarajan.a@bdu.ac.in, Cell No: 9445293534, 9698591993

முனைவர்.அ.கோவிந்தராஜன்,
நெறியாளர், இணைப்பேராசிரியர், பாரதிதாசன் உயராய்வு மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24.

Synopsis of the Thesis:

Melanmai Ponnusami is an eminent literary personality in Karisal Literature of Tamil Nadu. Poverty prevailed through his early stages of his life and his poverty striken early life and influenced his writings and helped his later literary productions. He is one among the Karisal writers who deals with the themes of Marxist ideology. Besides, His novels deal with prominent social themes and they reflect socio-cultural lives of middle class Tamil society. His novels Ishwar, Urmann, Ini are popular among Tamil readers. His works voice for the marginalized and oppressed people in the society. Apart from them, Ponnusami portrays the impacts of urbanization and social oppressions on women. He effectively handles the emotionally complex themes such as familial and sibling relationship. Apart from these themes, his novels are also known for the dialects and unique linguistic structures.

ஆய்வுச் சுருக்கம்

கரிசல் இலக்கிய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் மோலாண்மை பொன்னுசாமி ஆவார். குழந்தைப் பருவத்தையும் இளமைப்பருவத்தையும் வறுமையால் இழந்து வாழ்க்கைப் போராட்டத்தின் உச்சிக்கு சென்றார். அதன் விளைவாகவே அவரால் பல படைப்புகள் தமிழுலகிற்கு கிடைத்துள்ளது. கரிசல் வட்டார எழுத்தாளர்களுள் மார்க்சிய சிந்தனையைக் கொண்டவர் மேலாண்மை பொன்னுச்சாமி. இவரது படைப்புகளில் சமூகவியல் கோட்பாடு காணப்படுகிறது. ஈஸ்வர,ஊர்மண்,இனி, அச்சமே நகரம் போன்ற நாவல்கள்; மேலாண்மையை கரிசல் வட்டார படைப்பாளி என்பதை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றன. அவரது படைப்புகளில் நடுத்தர மக்களின் வாழ்க்கையே சித்தரிக்கப்படுகிறது. சமூகத்தால் ஏதோ ஒரு வகையில் ஒடுக்கப்படுகின்ற மக்களின் குரலாக இவரது படைப்புகள் திகழ்கின்றன. நகரமயமாக்கல், பெண்ணடிமை, அண்ணன் தங்கை பாசவுணர்வுகள் கரிசல் வட்டார மக்களின் வாழ்க்கையை புலப்படுத்துகிறன. கரிசல் வட்டார வழக்கு மொழி நடையில் அமையப் பெற்ற மேலாண்மையின் படைப்புகள் தமிழுலகில் தனியிடத்தைப் பெறுகின்றன.

திறவுச்சொற்கள்: மேலாண்மை பொன்னுச்சாமி, ஊர்மண், நாவல் இலக்கியம், புதிய உரைநடை.

முன்னுரை:

மேலாண்மை பொன்னுச்சாமியின் நாவல்கள் ஒரு தனித் தன்மையைக் கொண்டவை. காரணம் குக்கிராமத்தில் பிறந்து சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்து தமது கல்வியை ஆறாம் வகுப்போடு முடித்துக்கொண்டு தன் தம்பியை காப்பாற்ற வெண்டிய கட்டாயத்தில் வாழ்ந்த மேலாண்மை பொன்னுச்சாமி தான் வாழ்ந்த மக்களையும் மண்ணையும் நேசித்து வாழ்ந்தார். தனக்கென தனி கொள்கைகளை வகுத்துக்கொண்டு நாவல்களையும் சிறுகதைகளையும் எழுத தொடங்கினார். அவரின் படைப்புகள் அனைத்தும் கரிசல் மக்களின் வாழ்வியலை இவரது படைப்புகள் எதிரொலித்தன. பெண்ணுரிமை காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கமும் கிராம பகுதிகளில் வாழும் மக்களின் தனித்தன்மையை பாதுகாக்கவும் இவரது படைப்புகள் துணைப்புரிகின்றன. இவருடைய தனித் தன்மையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

நாவல்

உரைநடையில் அமையும் புனைவிலக்கியங்கள் இரண்டு. அவை நாவல் சிறுகதை என்பனவாகும். நடந்த நிகழ்வுகளை மையமாகக் கொண்டோ, அவற்றை ஒட்டியோ, கற்பனை கலந்து புனையப்படுவன புனைக்கதைகளாகும். இவை வருணனைப் பாங்கில் உரைநடையில் அமையும். உலக இலக்கியங்களாக அறியப்படும் இவ்விரண்டும் நவீன இலக்கியங்களாகும். ஐரோப்பியர்களின் வருகையால் இந்தியாவிற்கு கிடைத்த இலக்கிய வடிவங்கள். இவையிரண்டும் புனைக்கதை இலக்கியங்களாகும்.

‘கவிதையின் கற்பனை அழகுகளையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும், உரைநடையில் கொண்டுவர முடியும் என்று உணர்த்தப்பட்ட பிறகு தமிழ் உரைநடைப் படைப்பிலக்கியத்தில் முதலில் தோன்றியது நாவல் இலக்கியமே”1 என்பர். அங்ஙனம் உரைநடையில் தோன்றிய புனைக்கதை இலக்கியம் நாவல் இலக்கியம் எனப்பட்டது.

நாவல் (Novel) என்னும் சொல் ‘புதுமை’ எனும் பொருளைத் தருவது. ‘Novella’ என்னும் சொல் இத்தாலி மொழிச் சொல்லிலிருந்தே பிறந்தது என்பர். புதுமை என்னும் பொருளிலே நாவலைக்குறிக்கத் தமிழ் மொழியில் நாவல் என்ற சொல்லைக் கையாண்டனர். உரைநடையில் கதைக் கூறும் பாங்கில் அமைந்த மனித வாழ்க்கையின் விளக்கமே புதினம் என்பதாகும். புதினம் முதன் முதலில் இத்தாலி நாட்டில் தோன்றியது. அது பெரும்பாலும் காதல் நிகழ்ச்சிகளையே சித்தரிப்பதாய் இருந்தது. எனவே, ‘நாவல்’ என்னும் சொல் ஆதியில் ‘Romance’ என்னும் பொருளிலேயே வழங்கப்பட்டது. பின்னரே, மனித வாழ்க்கையைச் சுவைபடக் கூறும் வடிவமாயிற்று. சாமுவேல் ரிச்சட்சன் என்பவர் 1741 ஆம் ஆண்டு ‘பமிலா’ என்ற நாவலை எழுதினார். இதுவே உலகின் முதல் நாவலாக கருதப்படுகிறது.

நாவல் அமைப்பு

உரைநடையில் அமைந்த நாவலை ‘நெடுங்கதை’ என்பர். நாவல் பல மணிநேரம் படிக்கக்கூடியது நாவல் தனக்கென்றே அமைந்த ஒரு பெரிய கதைக்களத்தைக் கொண்டிருக்கும். சுருங்கக் கூறினால், நாவல் ஒரு பெரிய கதையையும் பாத்திரங்கள் பலரையும் கொண்டிருக்கும்.

தனிமனிதன் அல்லது சமுதாய வாழ்க்கையின் பல பகுதிகளையும் சித்தரித்துக் காட்டுவதாக அமையும். மனித வாழ்க்கையில் நிகழ்ந்த ஏதேனும் ஒரு பெரிய நிகழ்ச்சி, வரலாற்றுத் தொடர்புடைய உண்மைகள், அன்றாடப் பொது வாழ்க்கையில் நிகழும் சில நிகழ்ச்சிகள் உறவில் தொடர்புடைய சில சிக்கல்கள் ஆகியன நாவலுக்குரிய கதைப்பொருளாக அமையலாம். பொதுவாக தமிழ்ப் படைப்பாளர்களின் நாவல் இலக்கியம் என்பது,

1. உரைநடையில் எழுதப்படும் ஒரு இலக்கியம்
2. ஒரு பெருங்கதையை விவரமாக எடுத்துக் கூறும் இலக்கியம்
3. வாழ்வியலைக் கூறுவது
4. பாத்திரங்களின் உரையாடல் மூலமாகவோ, செயல்பாடுகள் மூலமாகவோ கதையோட்டம் நிகழ்த்தப்பெறும் இலக்கியம்.

என்ற நான்கு கருத்துகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்று தொடக்கக் காலத்தில் வரையறை செய்தனர். பின்னர் படைப்பு முயற்சிகளும் வாசிப்பு அனுபவங்களும் சமூகச் சூழல்களும் நாவல்களின் அமைப்பையும் உள்ளடக்கத்தையும் சுதந்திரமாக்கின எனலாம்.

தமிழில் நாவல் இலக்கியத்தின் தோற்றம்

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழில் நாவல் இலக்கியம் தோன்றியது. ஆங்கிலக் கல்வியைக் கற்று, ஆங்கில நாவல்களைக் கற்றவர்களே முதல் நாவலைப் படைத்தனர். ஆங்கிலக் கல்வி கற்ற நீதிபதியாகப் பணியாற்றிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையே 1876-இல் ‘பிரதாப முதலியார் சரித்திரம்” என்னும் நாவலை எழுதினார். புதினத்திற்கு எழுதிய ஆங்கில முன்னுரையில் ‘தமிழில் இம்மாதிரியான நவீன உரைநடை மக்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆகையால், இந்நூல் வாசகர்களுக்கு ரசமாகவும் போதனை நிறைந்ததாகவும் அமைந்திருக்கலாம் எனப்பெருமை கொள்கிறேன்” என்று குறிப்பிடுகின்றார். முதல் முயற்சியாக அமைந்த நாவல் குறித்தும் தமிழில் வேறுபட்ட கருத்துகள் உள்ளத்தை இங்குச் சுட்ட வேண்டியுள்ளது. 1856-ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த ‘காவலப்பன் கதை’ தான் முதல்தமிழ் நாவல் எனக் கூறினாலும், அ∴தொரு மொழி பெயர்ப்பு நாவல் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகையால் பிரதாப முதலியார் சரித்திரத்தையே முதல் நாவல் என்று கொள்கிறோம். இங்ஙனம் தமிழில் தோன்றிய முதல் நாவல்களாவன,

1. வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம்
2. இராஜம் ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம்
3. மாதவையா எழுதிய பத்மாவதி சரித்திரம்

ஆகியனவாகும். தமிழ் நாவலின் தோற்றத்தைப் போன்று அதன் வளர்ச்சியையும் மூன்று கட்டங்களாக வகுப்பர். மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை, பண்டித எஸ்.எம்.நடேச சாஸ்திரி,பி.ஆர்.ராஜமையர், சு.வை.குருசாமி சர்மா, அ.மாதவையா போன்றோரின் காலத்தை

முதற் காலகட்டம் (1910க்கு முன்) ஆகும். வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்பசாமி முதலியார், ஜே.ஆர்.ரங்கராஜு, எஸ்.ஜி.ராமானுஜலு நாயுடு, வை.மு.கோதை நாயகி அம்மாள், முதலியோர் எழுதிய கால கட்டத்தை இரண்டாம் கால கட்டம் என்கின்றனர். அகிலன் கா.ந.சுப்ரமணியன்,தி.ஜானகிராமன்,மு.வ, அறிஞர் அண்ணா, நா.பார்த்தசாரதி, சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், கு.ராஜவேலு, லக்ஷ்மி, கலைஞர் கருணாநிதி, விக்ரமன், இந்திராபார்த்தசாரதி, நீல பத்மநாபன், பாலகுமரன், குமுதினி, அநுத்தமா, ராஜம் கிருஷ்ணன், வாஸந்தி, விமலாரமணி, சிவசங்கரி, இந்துமதி, கிருத்திகா, பாமா, அநுராதாரமணன், சாண்டில்யன், கோவை. மணிசேகரன் போன்றோரின் படைப்புக் காலத்தை மூன்றாம் கால கட்டம் என்பர்.

மேலாண்மை பொன்னுச்சாமி

இலக்கியப் படைப்பாளியின் படைப்புகளையும் அவற்றின் தன்மைகளையும் இயல்புகளையும் அறிந்து கொள்ள இவர்தம் வாழ்வு குறித்து அறிவது தேவையாகிறது. படைப்பாளியின் குடும்பச்சூழல், கல்வி, தொழில், அரசியல், பொருளாதாரம், சமூகத் தொடர்புகள் போன்றவற்றையும் படைப்பூக்கமாக அமைவனவற்றையும் ஆராய்ந்தால் அவரின் படைப்புகள் விளக்கம் பெறும். அங்ஙனம் மேலாண்மை பொன்னுச்சாமி என்னும் படைப்பாளி கரிசல் நிலம் சார்ந்தவர். அவரின் படைப்புகளையும் வாழ்வையும் ஒப்பிட்டு நோக்கினால் வியப்பளிக்கும் வகையில் இருக்கின்றது. வானம் பார்த்த பூமியான கரிசல் நிலத்தில் பிறந்தவர்களுக்கே இருக்கக்கூடிய போராடும் குணம் வாழ்க்கையில் மட்டுமல்லாது படைப்புகளிலும் வெளிப்படுவதை உணர முடிகின்றது. அவ்வகையில் மேலாண்மை பொன்னுச்சாமி, விருதுநகர் மாவட்டம் 'மேலாண்மறைநாடு' என்னும் சிற்றூரில் 1951- ஆம் ஆண்டு பிறந்துள்ளார். இவரின் பெற்றோர் செல்லச்சாமி, அன்னபாக்கியம் ஆவார்கள்;. பெற்றேரின் கிராமப்புற வாழ்க்கைச் சூழலும் வாழ்க்கை நிலையும் ஐந்தாம் வகுப்போடு இவர்தம் கல்வியை முடித்துக் கொள்ள வேண்டிய காரணங்களாயின. 1962-இல் தந்தை இறந்து விட தனது படிப்பைத் தொடர முடியாமல் தாயையும் தம்பியையும் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றார்.

சிறுவயதில் அடைந்த துன்பங்கள்

தன் தந்தை விட்டுச் சென்ற பலசரக்கு கடையைத் தொடர்ந்து நடத்தி வர, பிறகு தன் தாயையும் இழந்தார். பாட்டியின் அரவணைப்பில் சிறிது காலம் வளர்ந்தார். பாட்டியும் இறக்க கல்வி கைவிட்டுப் போனது. இச்செய்தியை

'கிராமத்துப் பள்ளி என்றாலும் கண்டிப்பான சூழல், கனிவான ஆசிரியர்கள் என்பதால் கல்வியை மேலாண்மை ஆனந்தமாய் கற்றுக் கொண்டிருக்கிறார். பகலெல்லாம் படிப்பு இரவில் வீட்டுப் பாடங்களை முடித்துவிட்டு 'கதைபோடும்' அருஞ்சுணையைத் தேடி போய்விடுவார். அவரும் வண்டி வண்டியாய் கதைகள் போட ஆனந்தமாய் கதைகளை கேட்டு வளர்ந்தார். அக்கதைகள் அவருக்குள் கற்பனை சிறகுகளை வளர்த்தது. தானும் அது போன்று கதைகளைக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு தன் நண்பர்களோடு கதை சொல்லி பழகுவார். இவரின் ஆர்வம் மேன்மேலும் வளர்ந்தது"2

‘அருஞ்சுனை பாட்டையாவைப் போல் செ.மு.துரைச்சாமியும் கதைச் சொல்லுவார். அவரது கதைகளை தினந்தோறும் கேட்கும் வழக்கத்தைக் கொண்டவராக பொன்னுச்சாமி இருந்தார். கல்வியையும் கதைக் கேட்பதையும் ஆர்வத்தோடு மேற்கொண்ட அவருள் ஒரு படைப்பாளன் உருவாகிக் கொண்டிருந்தான். அதனை மிகச் சரியாக அடையாளம் கண்டவர் எஸ்.ஏ.பெருமாள். மேலாண்மையை ஊக்கவித்து கதை எழுதும் முயற்சிக்க வித்திட்டார். கதை சொல்லிக்கான தகுதியை வளர்க்க முற்பட்டு அம்முயற்சி எழுத்தாளனாக மாறியது. இம் மாற்றத்திற்கு பெருமாள்தான் காரணம்”3

‘அப்பொழுது யாரும் எதிர் பாராத நிலையில் மேலாண்மை பொன்னச்சாமியின் தந்தை மரணமடைந்தார். அச்சம்பவம் அக்குடும்பத்தை உலுக்கி விட்டது.தாயும் நோயாளியாகி படுக்கையாகி விட்டார். கொஞ்ச நாளிலேயே தாயாரும் இறந்து விட்டார். அப்பொழுது அவருக்கு வயது பத்து. பெற்றோரின் இழப்பு அவருக்கு பேரிடியாய் இருந்தது. மேலாண்மையின் இடுப்பில் சிறு குழந்தையாய் கரிகாலன், கைகளில் புத்தகங்கள், எதிரே வாழ்க்கை. ஆதரவற்ற நிலையில் விடப்பட்ட மேலாண்மையையும் கரிகாலனையும் பாட்டி முத்தம்மாள் அரவனைத்துக் கொண்டாள். காலம் மிக கொடியது. பாட்டியும் இறந்து போக மேலாண்மையும் கரிகாலனும் அநாதைகளாக தெருவில் நிற்க காலம் அவர்களை கேலி செய்தது”4

‘ தம்பியின் கண்ணீரும் சமூகத்தின் கேலிச் சிரிப்பும் அவருக்கு போராட்ட வெறியைத் தூண்டியது. தம்பிக்காக வாழ்க்கையுடன் போராட வேண்டியிருந்தது. விரும்பி சுவைத்துக் கொண்டிருந்த கல்வியை விட்டுவிட்டு களத்தில் இறங்கினார்.சிறிய விவசாய நிலத்தை தானே முன்னின்று பார்த்துக் கொண்டும் சிறிய பெட்டிக் கடையையும் நடத்தலானார். முடிந்த வரையில் போராடிப் பார்த்தார் ஆனால் இரண்டிலும் தோற்று நின்றார். மேலாண்மை சகோதரர்களின் வாழ்க்கை அந்த சின்னஞ்சிறு கிராமத்தில் கதையாடல் பொருளாய் மாறியது. விரும்பிய கல்வியும் இல்லை, வாழ்க்கைத் தொழிலும் கைக்கொடுக்கவில்லை என்ற நிலையில் அக்கிராமத்தை விட்டு வெளியூர் சென்று தொழில் செய்ய முடிவு செய்தார்”5

என்று மூ. பாலசுப்ரமணியன் விவரிக்கிறார்.

தஞ்சாவூர் பயணம்

பெற்றோரின் இறப்பு, கல்வியின் இழப்பு, வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வி என துன்பங்களைச் சந்தித்த மேலாண்மை தனது தம்பியைக் காப்பாற்ற வெளியூர் சென்று வியபாரம் செய்ய முடிவு செய்து தஞ்சாவூர் சென்றார். கருப்பட்டி மற்றும் கடலை மிட்டாய் வியபாரம் பார்க்கலானார். இச்சூழலை,

‘ஊரைச் சுற்றி மானாவரி நிலங்கள் , நிலங்களுக்கு காவலாய், கிணறுகள், கேட்பாரற்று தன் போக்கிற்குச் செல்லும் மனித வழித் தடங்கள், விவசாயத்தைத் தவிர வேறொன்றையும் அறியாத மக்கள், இந்தியாவின் மற்ற பகுதிகளில் நடக்கும்செய்திகளை வானொலியைத் தவிர வேறு எவற்றின் வழியும் அறிய முடியாத நிலைஇ அரசு நடுநிலைப் பள்ளி என்பதுதான் அம்மக்களின் கனவை நினைவாக்கும் நிதர்சனம். இப்படியான சூழ்நிலையில் தான் மேலாண் மறைநாடு இருந்தது. பொன்னுச்சாமி அந்த சிறு வயதில் தன் தம்பியைப் பாட்டியின் பாதுகாப்பில்

விட்டுவிட்டு பிழைப்புத்தேடி வெறியூர் செல்ல முடிவெடுத்தார். அரவணைக்கும் பெற்றோரின் இழப்பு, ருசித்துக் கற்ற கல்வியின் இழப்பு, விவசாயத்தில் இழப்பு, பெட்டிக் கடையில் இழப்பு என வாழ்வின் எல்லாவற்றிலும் இழப்புகள். இவ்விழப்புகளை சரிகட்ட பிழைப்புத் தேடி வெளியூர் பயணமானார்.ஒருவகையில் சிறுபுள்ள வெள்ளாமையாகி போன தோல்வியின் அவமானத்திலிருந்து தப்பிக்க வெளியூர் சென்றார். ஆம், தன்னை தயார்படுத்திக் கொண்டார். பிறந்து வளர்ந்த உயிர்கிராமத்தை விட்டு வெளியூர் செல்கிறார் என்ற பேச்சும் கூட அக்கிராமத்தில் கேலி கூத்தானது. எல்லா அவமானங்களையும் தாங்கிக் கொண்டார். உயிராய், வாழ்க்கைக்கான பற்றுக் கோடாய், ஆதாரமாய் என்னும் தம்பிக்காக வாழ்க்கையோடு போராடியே ஆக வேண்டும் என்று தீர்மானித்துத் தஞ்சாவூர் செல்ல முடிவெடுத்தார்.

'வறட்சியைத் தவிர வேறொன்றும் அறியாத அந்த கிராமத்துச் சிறுவன் நெற்களஞ்சியமான தஞ்சாவூருக்குச் சென்றார். காவிரித் தாயின் அரவணைப்பில் செழித்திருந்த வயற்காடுகள் அவருக்கு பிரமிப்பைத் தந்தன.விவசாயத்தில் தோற்றுப்போயிருந்த அவருக்கு செழித்திருந்த தேசம் புது தெம்பை தந்தது. கடலை மிட்டயை மிதிவண்டியில் வைத்துக்கொண்டு தஞ்சைத் தெருக்களில் அலைந்து திரிந்தார். கரிசல் பூமியில் பருத்தி விளைவது போல் நிலக்கடலையும் செழித்து வளரும். கரிசல் காட்டு நிலக்கடலையே தனிதான். அதனால்தான் கோவில் பட்டியில் தயாரிக்கப்படும் கடலை மிட்டாய்களுக்கு தனிச்சுவை வந்து விடுகிறது. போக்குவரத்து அதிகம் இல்லாத காலத்தில் மேலாண்மை கடலை மிட்டாய்களை வாங்கி கொண்டு போய் தஞ்சையில் வியபாரம் செய்தார்"6

மேலாண்மையின் இளமைப்பருவம்

இளமையிலேயே இவர் குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டது. தமது வாழ்க்கையை கிராமபுற மக்களோடு தொடங்கினர். பாட்டியின் உதவியோடு வாழ்ந்த இவரது வாழ்க்கையில் வறுமையும் சூழ்ந்தது. எப்படியாவது வாழ்ந்தாக வேண்டும் என்ற நோக்கில் தம் தம்பியைப் பாட்டியிடம் விட்டுவிட்டு 1972-இல் தஞ்சாவூர் சென்றார். அங்கு திராவிடமணி என்பவரின் உதவியோடு கடலை மிட்டாய் மற்றும் பரிசு சீட்டு விற்கும் பணியில் ஈடுபட்டார். இதில் கிடைத்த வருவாயில் வாழ்க்கை நடத்தினார். இளமைப்பருவம் இவருக்கு மட்டும் இனிமையானதாக அமையவில்லை. வறுமையும் கொடுமையும் இந்த சூழ்நிலையில்சோகத்தையும் அவமானச் சுமைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளார்.

சமூகவியல் படைப்பாளி

மேலாண்மை பொன்னுச்சாமி என்னும் படைப்பாளி சமூகத்தால் உருவாக்கப்பட்ட எழுத்தாளர்.அவரின் படைப்புகள் சமூகத்தின் சிக்கல்களிலிருந்து உற்பத்தியானவை. இந்திய சமூகத்தில் படிந்துள்ள பழைமைவாதத்தாலும் அரசியல் பொருளாதாரக் காரணங்களாலும் கிராமியச் சமுதாயம் எங்ஙனம் பாதிக்கப்படுகின்றது என்பதை தனது படைப்புகளின் வழி அடையாளப்படுத்தியுள்ளார். இவரது படைப்புகளில் பெண்களின் வாழ்வியல் மிகுதியாகப் பேசப்படுகின்றன. பெண்களின் வாழ்வியல் துன்பங்களுக்குச் சமூக நடப்புகள்

காரணமாகுமற்றையும் விவாதித்துள்ளார். மார்க்சிய நோக்கம் கொண்ட படைப்பாளியான மேலாண்மை, சமூகவியல் பார்வையைக் கொண்டு படைப்புகளைத் தந்துள்ளார்.

சமூகவியல் கோட்பாடு

மனித இனம் சார்ந்து வாழும் இயல்புடையது. அங்னம் கூடி வாழ்தலே சமூகம் என்னும் சொல் குறிக்கின்றது. மனிதன் தன் இனத்தாரோடு கூடி கலந்து வாழ்வதில் சமூகம் உருவாகின்றது. தனித்துவமான பண்பாடு நிறுவனம் சார்ந்த தொடர்புகள், ஒரே மாதிரியான நிலப்பகுதியில் வாழ்தல், ஒரே மொழியினைப் பேசுதல் போன்ற ஒற்றுமைகளைக் கொண்ட மக்கள் குழுவினைச் சமூகம் என்பர். சமூகம் என்பது மனிதத் தொடர்புகளின் முழுமையைக் குறிக்கின்றது. இங்ஙனம் மனித சமூகம், சமூக உறவுகள், சமூக நடைத்தைகள், சமூக அமைப்பு முறை, சமூக வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிவியல் நோக்கில் ஆராய்வதே சமூகவியல் எனப்படும். இது ஆங்கிலத்தில் 'Sociology' எனப்படுகிறது.

சமூகவியல் வகைகள்

சமூகவியலை அறிஞர்களும் சமூகவியலாளர்களும் ஒரே மாதிரியாக அணுகுவதில்லை. உலகின் சமூகக் கட்டமைப்புகள் வெவ்வேறானதாக இருப்பது போல், அச்சமூக மக்களைச் சேர்ந்த நிறுவனங்களின் அடிப்படையில் சமூவியலாளர்கள் இதனை வகைப்படுத்தியுள்ளனர். பொதுவாகச் சமூகவியலின் அடிப்படையில் இரண்டு முக்கிய வகைகள் பேசப்படுகின்றன. அவை, தரச் சமூகவியல், அளவுச் சமூகவியல் என்பனவாகும். இன்று பெரும்பாலான ஆய்வாளர்கள் தரமான மற்றும் அளவு முறைகளைப் பயன்படுத்துகிறார்.

1. தரமான சமூவியல் (பரந்த சமூகவியல்) சிகாகோ பல்கலைக்கழகத்தில், அல்பியன் ஸ்மால்)1854-1926) என்பார் இச்சமூகவியலை உருவாக்கினார். இது குறிப்பாக ஒரு குழுவின் துல்லியமான செயல்பாட்டை அறிய முற்படுவதையும் அக்குழுக்களின் செயல்பாடுகளையும் குறிக்கிறது. புதிய குடியேற்றம் நகரத்தையும் அதன் குடியிருப்பாளர்களையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்கிறது. மேலும், ஆரம்பகால சமூகவியலாளர்கள் தாங்கள் கண்ட சமூக மாற்றங்களால் ஈர்க்கப்பட்டனர். தனிப்பட்ட நேர்க்காணல்கள், இனச் சடங்குகள் மற்றும் சடங்குகள் பற்றிய உற்றுநோக்கை அவ்வகை வலியுறுத்துகிறது. அவதானிப்புகளை உள்ளடக்கிய தரமான ஆய்வுகளை நடத்தத் தொடங்கினார்.

2. அளவு சமூகவியலில் மேற்கண்ட சமூகவியலின் பெரும்பாலான எடுகோள்களை ஏற்று , குறிப்பிட்ட வரையறை (அளவு) கொள்வதை முன்னிறுத்தியதால் அளவு சமூகவியல் எனப்படுகிறது. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சமூகவியலாளர்களைப் போலவே, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சமூகவியல் வேறுவிதமாக வளர்ந்தது. சிகாகோ பல்கலைக்கழகச் சமூவியலாளர்களைப் போலவே, ஹார்வர்டு பல்கலைக்கழகப் புலம்பெயர்ந்தோரின் அனுபவத்தைப் புரிந்துக்கொள்ள முற்பட்டனர். ஆனால் அவர்கள் ஒரு அளவுவழியில் தங்களுடைய ஆராய்ச்சியை மேற்கொண்டனர். அளவு சமூகவியல் அனுபவங்களையும் போக்குகளையும் புரிந்து கொள்ள புள்ளியியல் பகுப்பாய்வை மேற்கொள்கின்றனர்.

சமூகவியலை மேலும் மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை,

1. தத்துவார்த்த சமூகவியல்
2. அனுபவபூர்வமான சமூகவியல்
3. விண்ணப்பதாரர் சமூகவியல்

எனப்படும். தத்துவார்த்த சமூகவியல் அடிப்படையாக கொண்டது அறிவியல் ஆராய்ச்சி. தத்துவார்த்த அறிவின் வளர்ச்சிக்கான சமூகம். இருப்பினும், அனுபவ சமூகவியல் இல்லாமல் இந்த பார்வைக்கு போதுமான அடிப்படை இல்லை. அனுபவ சமூகவியல் என்பது சமூகவியல் தகவல்களின் செயலாக்கம் மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இரு அறிவியல் துறையின் விளக்கத்தன்மையை வலியுறுத்துகிறது. கடைசி வகை-பயன்பாட்டு சமூகவியல் , மற்றவர்களைவிட நடைமுறையை அடிப்படையாகக் கொண்டது. தீவிர சமூகப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கலைத் தீர்க்க ஏற்கனவே பெறப்பட்ட சமூகவியல் தகவல்களைப் பயன்படுத்துகிறார். நாட்டிற்குத் தக்கதாகவும் நாட்டிலுள்ள இனங்களுக்குத் தக்கவும் அறிஞர்களின் ஆய்வுக்கேற்பவும் சமூவியலின் வகைகள் விவரிக்கப்படுகின்றன.

நாவல்களின் குறியீடு

இனி

'இனி' என்ற சொல், ஒரு செயல் தொடர்ந்து நடந்து முடிந்துள்ளது. இனிமேலும் அது தொடர்ந்து நடக்கும் என்பதைக் கூற இச்சொல் பயன்படும். இங்கு இனி என்பது ஜம்புலிங்கம் உழவுத் தொழிலின் மீது தீராக் காதல் கொண்டவர். ஆனால் அவரது மகன்கன் உழவுத் தொழிலை வெறுத்து நகரம் சென்றுவிடுகின்றனர். ஜம்புலிங்கம் இதனைப்பற்றி பெருங்கவலைக் கொள்கிறார். தனக்குப் பிறகு விவசாயத்தைக் கவனிக்க ஆள் இல்லையே என புலம்புகிறார். இவ்வாறு எல்லோரும் விவசாயத்தை வெறுக்க ஆரம்பித்தால் உலக மக்கள் உணவிற்கு என்ன செய்வர் என்பது அவரது உயிரையும் உடலையும் வருத்தக்கூடிய கேள்வியாக உள்ளது. ஜம்புலிங்கம் வறுமைக் காலத்தில் இறந்துவிடுகிறார். அவரை அடக்கம் செய்வதற்குப் பணம் இல்லை. அப்பொழுது ஜம்புலிங்கத்தின் உழவுக்கலப்பை இருக்கிறது. அதனை உடைத்து எரிக்க முடிவு செய்கின்றனர். அந்நேரம் ஜம்புலிங்கத்தின் பேரன் சுப்பிரமணி வேண்டாம், கலைப்பையை உடைக்காதீர்கள் என கூறுகிறான். இதிலிருந்து விவசாயத்தை மீண்டும் தொடங்க அடுத்த தலைமுறை வருகிறது என்பதைக் குறியீடாக விளக்க 'இனி' என்ற தலைப்பை இட்டுள்ளார் ஆசிரியர்.

அச்சமேநரகம்

அச்சம் என்பது பயம், நரகம் என்பது அருவறுக்கத்தக்க ஒன்று. அச்சத்தால் பெண்களின் வாழ்கை நரகமாகிறது என்கிறார் ஆசிரியர். சுப்புத்தாய் என்பவள் நோய்வாய்ப்பட்ட ஒருவனை கணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறாள். அவனைக் கண்டால் அவளுக்கு அருவறுக்கத்தக்க நிலைதான். அவனோடு தாம்பத்திய வாழ்விலும் ஈடுபடுவதில்லை. பிறகு நாட்டாண்மை வீட்டுக்கு வேலைக்குச் செல்கிறாள் சுப்புத்தாய். ஆனால் அங்கும்

அவளுக்கு நிம்மதியில்லை. நாட்டாண்மை இவளைப் பெண்டாளுகிறார். அப்பொழுதும் வாய்திறந்து பேசமுடியவில்லை. அதேபோல் கதாநாயகியான பூங்கிளி தான் காதலிக்கும் செய்தியினைத் தன் தந்தையிடம் சொல்லமுடியாமல் தவிக்கிறாள். அவளின் சொத்திற்கு ஆசைப்பட்டு அவளை திருமணம் செய்துகொள்ள முன்வருகிறான் ஒருவன். திருமணத்தன்று அவளின் வீட்டைக் கேட்கிறான். இப்பொழுதுதான் பூங்கிளி பேசுகிறாள். எனக்கு அந்த மாப்பிள்ளை வேண்டாம் என்றும்; பணத்திற்காக என்னை திருமணம் செய்யும் இவன், நாளை நிறைய பணம் கிடைத்தால் இன்னொரு பெண்ணையும் திருமணம் செய்வான் எனக் கூறுகிறாள். அதனால் அவள் விரும்பிய வசந்தனைத் திருமணம் செய்து கொள்கிறாள். சுப்புத்தாய் பேசுவதற்குப் பயந்தாள். வாழ்க்கை இழந்து அவமானப்பட்டு நின்று கொண்டிருக்கிறாள். அச்சப்பட்ட நிலையில் ஒரு பெண் வாழ்க்கையை இழக்கிறாள். அச்சம் நீங்கிப் பேசுகிற பெண் சிறந்த வாழ்க்கையை வாழ்கிறாள். அவ்வகையில் இத்தலைப்பு சிறந்த குறியீடாக விளங்குகிறது.

ஊர்மண்

'ஊர்மண்' நாவல் சிறந்த நாவலாகும். ஊர்மண் என்பது இங்குள்ள மக்களைக் குறிக்கிறது. மண் ஒன்றுதான் என்றாலும் மனிதர்கள் வேறுபட்டவர்கள் என்பதை விளக்குகிறது. தாழையா நாடார் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வேண்டும் என்று நினைப்பவர். அவர் வாய்விட்டு பேசிய வார்த்தைகள் வீணாய் போனதில்லை. ஆனால், பொறாமை உள்ளம் கொண்ட நல்லையா நாடாரும் அரசியல் ஆசை கொண்ட கார்மேகமும் சூழ்ச்சி செய்து தாழையா நாடாரை ஊரைவிட்டுத் தள்ளி வைக்கின்றனர். அவர்களிடம் எதிர்ப்பைக்காட்ட யாரும் முன்வரவில்லை. ஊரில் அத்தனை நன்மை செய்தவருக்குத் தண்டனை கிடைக்கிறது. அதை எதிர்த்துக் கேட்கும் மக்களின் மனநிலையினைப் புலப்படுத்தும் வகையில் இத்தலைப்பு குறியீடாக அமைந்துள்ளது.

ஈஸ்வர

'ஈஸ்வர' என்பது ஓராண்டைக் குறிக்கும் சொல்லாகும். இவ்வாண்டில் பிறந்த மக்கள் என்பது ஒருவீட்டில் பிறந்த பெண்மக்களைக்குறிக்கும். பிறந்த பெண் மக்களுக்குச் சேலை எடுத்து அவர்களை உபசரிக்கும் ஆண்டாக விளங்குகின்றது. இந்த நிலையுடன் சகோதரிகளை ஆண்பிள்ளைகள் தன் வீட்டிற்கு அழைத்துப் புதிய ஆடைகள் கொடுத்து அவர்களுக்கு மரியாதை செய்வதைக் குறிக்கும் அதனையே குறியீடாகக் கொண்டுள்ளது இத்தலைப்பு.

தைமகள்

தைமாதம் அறுவடை முடிந்து வெள்ளாமை செழித்து மக்கள் தங்கள் உழைப்பின் பயனை இடையம் மாதமாகும். அம்மாதத்தில் பொங்கலிட்டு ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வது சிறப்பானதாகும். இங்குச் சமுத்திரம், சரஸ்வதி அருக்குமட்டும் பொருளாதார நிலையால் குலதெய்வக் கோவிலுக்குச் செல்ல முடியாது என்ற கருத்து வேறபாடு நிலவுகிறது. ஆனால், தைமாதமும் வருகிறது. விளைச்சலும் பெருகுகிறது. கோவிலுக்குச் செல்லவும் பணம் கிடைக்கிறது. அதனைக் குறியீட்டுத் தலைப்பாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

பெண்கள் நிலை

பழங்காலத்தில் பெண்கள் ஆடவரை விட உயர்நிலையில் இருந்தனர். அவ்வரலாறு இன்று மறுக்கப்பட்டுள்ளது. சில செயற்கைக் காரணங்களால் இன்று பெண்கள் தமது உயர்நிலையினின்றும் வீழ்ச்சி அடைந்தனர். ஆடவருக்குப் பணிந்து போகும்படி பெண்கள் கடவுளாள் படைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் ஆண்களுக்குப் பணிந்து நடத்தலே இயற்கை விதியென்றும் நம்பப்பட்டு வருகின்றது. இதனை இலக்கியங்களும் எடுத்தியம்புகிறது.

நடையின் இன்றியமையாமை:

'நடை என்பது ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்த வல்லது. அவரை இனம் கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப்பாங்கே அது. இலக்கியத்தில் அதுவே மிகப்பெரிய சாதனை என்று கூறுகிறார் முர்ரே" 7என மா.இராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

'ஜனார்த்தன் ஸ்விப்ட் (Janarthan Swift) என்பவர் தகுந்த இடத்தில் தகுந்த சொற்களைக் கையாள்வதே சிறப்பான நடை என்று நடைக்கு விளக்கு தருகிறார"8

'எட்மண்ட் கூஸ் என்பவர் நடை ஆசிரியரின் மனப்பாடமே என்கிறார்."9

'பிஸாபர் என்ற மேலைநாட்டு அறிஞர் ஒருவர் நடை என்பது கவிதையைப் போல் ஒலி நயமும் அறிவியல்போல் திட்பமும் யாழ் ஒலி போல் அனிமையையும் தீயின் கொழுந்து போல் எழுச்சியும் வீழ்ச்சியும் மிக்கதாய் இருக்க வேண்டும்"10

மேற்கூறிய அறிஞர்களின் கருத்துக்கள் நடையின் முக்கியத்துவத்தோடு நடையின் இலக்கணத்தையும் உணர்த்துகின்றன. நடை என்பது படைக்கின்ற ஆசிரியருக்குத் தக்கவாறு பலவாறாக அமைத்துக் காண்கிறோம். எவ்வாறாயினும் படிக்கின்றவர்களைத் தன்னோடு ஒன்றுபடுத்திக் கொண்டு கதைக்கருவைத் தெளிவாக விளக்கி நிற்கும் நடையே சிறந்தநடை எனலாம். அவ்வகையில் கதைக் கருவோடு பின்னி பிணைந்த நிலயிலும் படைத்துள்ள பாத்திரங்களுக்கு ஏற்பவும் பல்வேறு நடை உத்திகளைக் கையாண்டு உள்ளார் மேலாண்மை பொன்னுச்சாமி.

'அவர்களைப் பிணைத்தது உழைப்பு
உழைப்பின் மீதியிருக்கிற ஆர்வம்
பிடிப்பு ,தீவிரம்,சாகசம்,உழைப்பின்
மீதியிருக்கிற காதல்தான், இனம் புரியாத
உணர்வுச் சரடுகளால்
அவர்களுள் முடிச்சுப் போட்டு
இறுக்கியது ஒரே உணர்வுச்சரபியிற்று"11

என்கிறார். மேலும் மற்றொரு இடத்தில் ஜம்புலிங்கத்திற்கு பாசத்துடன் மகாலெட்சுமி உணவு கொடுக்கிற போது,

'எல்லையில்லா அன்பு உன் உயிர்
வாட என் உயிர் வாழாது என்று

சொல்கிற உயிர் பாசம் உயர் பிணைப்பு"12

என்று உணர்ச்சிப் பொங்க இலக்கியத் தரமான நடையில் ஜம்புலிங்கத்தின் எண்ணவோட்டத்தை எழுதியுள்ளார். அதேபோல் 'ஈஸ்வர" என்னும் நாவலில் கணேசராஜ் தன் தங்கையின் முன் நிற்கும் நிலையினைக் கூறும் பொழுது,

'கணேசராஜ் இன்னும் தேம்புகிறாள்

கலங்கிச் சிவந்த கண்கள்,

சிவப்பு மெல்லிய ரேகைகள், உருளாமல்

நிலைத்து நிற்கிள கருமுழிகள் அசைய
முயல்கிற அண்ணனின் உதடுகள் இன்னும்
என்னமோ கேட்க விழைகிறான். விரும்
பினாலும் தயங்குகிளான்.

இன்னும் எதற்கோ கெஞ்ச விரும்புகிறாள்"13

என அழகிய சொற்களை அணி சேர்த்து இலக்கியத்திற்கு புத்துயிர் காட்டுகிறார் மேலாண்மைப் பொன்னுச்சாமி.

பெண் என்பவள் ஆணுக்கு அடங்கியே நடக்க வேண்டும் என்று முனியம்மாவிற்கு ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து அறிவுரைத் தருகின்றனர். இதனை விளக்கும் வகையில் 'அச்சமே நரகம்" என்னும் நாவலில் இடம் பெற்றள்ள பின்வரும் ஆசிரியரின் கூற்றே அவரின் தரமான நடைக்கு எடுத்தக்காட்டாகும்.

'அவன்ஆத்மாவில் நெருப்பு வைத்தனர்

எண்ணெய் ஊற்றினர். அணைந்து
போகாமல் கொழுந்து விட்டு எரிய வைத்தனர்.
அவளைச் சாம்பலாக்குவதில் சுயத்தைச்
சுட்டெரித்து நிறம் மாற்றுவதில் சிந்தனை
பலாத்காரத்தின் மூலம் அவளைப் பணிய
வைப்பதில் பயமுறுத்தி ஒடுக்குவதில் உணர்வு
ரீதியான மாற்றம் நிகழ்த்துவதில் சன்னம்
சன்னமாய் வெள்ளியடைந்து வந்தனர்14

என்ற வரிகள் அமைந்துள்ளன.

வட்டார வழக்கு நடை:

ஒரே மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற வெவ்வேறு இடங்களில் தூர இடைவெளிக்கு ஏற்ப மொழி வேறுபட்டு நிற்கிறது. தூரம் மட்டுமின்றி அந்நிலத்தின் இயற்கை காரணமாகவும் அங்கு வாழும் மக்களின் சூழ்நிலைக் காரணிகளும் அவரகள் பேசும் மொழியை வட்டார வழக்காக மாற்றி விடுகின்றன.

'ஊர்மண்' என்ற நாவலில் சிந்தாமணி ஊரை விட்டு வெளியேறிப் பட்டனம் சென்று பணிபுரிந்து பின் கிராமத்திற்கு வருகிறான். அவனை வரவேற்கும் அவனது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் பேச்சாக,

‘என்ன சுப்ரமணி... நீ நல்லாருக்கியா...?

‘நா போட்ட ரெண்டு காயிதமும் கெடைச்சதா?”

‘கெடைச்சது மொதக் காயிதத்தை ஊர்

பூராவும் படிச்சிட்டாக. ஒருத்தருக்க பாக்கி
யில்லாம எல்லாரும் படிச்சாக. எல்லாருக்கும்
ரொம்ப சந்தோசம் ஒன்னையே நேர்லேயே
பார்த்துட்ட மாதிரி...”

...

என்னத்தை நெனைக்க? நீ பாட்டுக்கு
ஊரை விட்டுட்டு ஒடிட்டே. நாங்க கெடந்து
மனசு சங்கடப் பட்டுட்டுடோம். ரொம்பப்
பேதலிச்சு போய்ட்டோம். எங்க தெருக்
காரங்கதா ரொம்ப நொந்து போய்ட்டாக”15

என்று ‘கடிதம்’ என்பதை ‘காயிதம்’ என்றும் ஊரிலுள்ள ‘அனைவரும்’ என்பதை ஊர் பூராவும் என்றும், ‘ஒன்னும் புரியாமல் போய்விட்டோம்’ என்பதை பேதலிச்சுப் போய்டடோம் என்றும் ‘நினைப்பது’ என்பதை ‘நெனைக்க’ என்றும் வட்டார வழக்குச் சொற்களை எடுத்தாண்டுள்ளார். மேலாண்மைப் பொன்னுச்சாமி.

‘ஈஸ்வர’ என்னும் நாவலில் லட்சுமி தான் வளர்க்கும் ஆடுகளிடம் பேசுவதாக அமையும் சொற்களை பின்வருமாறு எழுதுகிறார்.

“அடச்சீ.... சனியங்களா! சித்தே பொறுங்

களேன்... எதுக்கு இந்த பறப்பு பறக்கீக?
என்று சள்ளையும் எரிச்சலுமாய் கத்தினாளட.
வீட்டுக்குள் காப்பி பெட்டியை இறக்கி வைத்தாள்.
அதன் பாரம் பாரத்தைச் சுமந்து வந்த
வலது கை, கடாட்பெட்டியின் நாத்தடம்,
சதுரப் பின்னலாய் பதிந்து பேயிருந்த
சுவடு”16

அண்ணன் தங்கை பாசம் என்பது அழகான அன்பு மட்டுமே நிறைந்த தனி உலகம். இங்கு ‘ஈஸ்வர’ என்னும் நாவலில் தங்கை தன் அண்ணனிடம் (உலகத்திலுள்ள ஒட்டுமொத்த தங்கைகளின் கூற்றாக) பேசும் நிலையினை அழகிய சொற்களைக் கொண்டு எழுதியுள்ளார் மேலாண்மை பொன்னுச்சாமி. அச்சொற்கள் வரிகளில்,

‘சரிண்ணே… நீ இம்புட்டுச் சொல்லி மருகனுமா?
ஏந்த பொம்பளைக்கும் பொறந்த வீட்டுப்
பாசம் ரத்தத்துலயே இருக்கும். கட்டை வேகுற
வரைக்கும். தங்கச்சி குடும்பம் தலைக்கணும்னு

நினைக்காத அண்ணமாரு ஒலகத்துலயே
ஒன்னு ரெண்டு இருப்பாக.
ஆனா... அண்ணன் குடும்பம் கெட்டுப்
போகணும்னு எந்த தங்ச்சியும்
கனாவுல கூட நெனைக்கமாட்டா... நா
அவருகிட்டே கட்டானம் பேசுதேன் போதுமாண்ணே"17

என்று கரிசல்காட்டுத் தங்கையின் பாசநிலையை எடுத்துக் கூறுகிறார்.

முடிவுரை:

மேலாண்மை பொன்னசாமியின் நாவல்கள் அனைத்தும் தமது மக்களுக்கு விவசாயத்தால் ஏற்படும் குறைகள், அரசு விவசயத்தில் மக்களுக்கு செய்யவேண்டிய நலத்திட்டங்களை செய்யாமல் விட்டது: அதனால் வறுமையின் எல்லைக்கு தள்ளப்படுவது போன்றவற்றையும் பெண்களின் உழைப்பை உயர்த்திக்காட்டுவதையும் இவரது நாவல் வாயிலாக அறியமுடிகின்றது. உழைத்தவர்கள் கொண்டு செல்லும் பொருள்களுக்கு போதிய மதிப்பு இல்லாமல் மக்கள் படும் இன்னல்கள் மற்றும் அதனால் மக்கள் விவசாயத்தை வெறுக்கும் நிலையையும் மக்களின் சாதியக் கொள்கை, முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்டுதல் போன்ற கருத்துகள் மேலாண்மை பொன்னுசாமியின் படைப்புகள் மூலம் அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்:

1. தற். த,ப.74.
2. மே. பொ, ப.9 &10
3. மேலது,ப9&10
4. மேலது.ப,9&10
5. மேலது,ப9&10
6. மேலது,ப10&11.
7. புது.உரை,ப.160.
8. நா. இலக்கியம்,ப.171-
9. மேலது,ப.177.
10. மே. பொ. இனி,ப.40
11. மே.பொ.இனி,ப.40
12. மே.பொ.இனி ,ப.49.
13. மே.பொ.ஈஸ்வர,ப.68.
14. மே.பொ.ஈஸ்வர,ப.84.
15. மே.பொ.ஊர்,மண் ,ப.84.
16. மே.பொ.ஈஸ்வர,ப.79
17. மே.பொ.ஈஸ்வர,ப.79.

பார்வை நூல்கள்:

1. பாலசுப்ரமணியன்.மூமேலாண்மைப் பொன்னுச்சாமி, கலைஞர்பதிப்பகம்,சென்னை17.
2. தண்டாயுதம்.இரா.நாவல் வளம்,தமிழ்ப்புத்தகாலயம்,சென்னை-05.
3. மா.இராமலிங்கம்,5-ம் பதிப்பு,1981, புதிய உரைநடை, தமிழ்ப் புத்தகாலயம்,சென்னை.
4. கோ.வெ.கீதா,நாவல்கள் ஓர் அறிமுகம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.சென்னை.

Reference Books:

1. Balasubramanian. Moomeylaanmaip Ponnuchamy, Kalaignar Pathippagam, Chennai 17.
2. Dandayudham, R. Naval Valam (Wealth/Resource of Novels), Thamizh Puthakalayam, Chennai-05.
3. Ramalingam, M. Puthiya Urainadai (New Prose), 5th edition, 1981, Thamizh Puthakalayam, Chennai.
4. Geetha, Ko. Ve. Navalkal Or Arimugam (Novels: An Introduction), New Century Book House, Chennai.

License

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.